இந்த நிலையில் ஒமைக்ரான் பரவல் காரணமாக ஜனவரி 20 வரை விடுமுறை விடப்பட்டுள்ளது. இதையடுத்து, 21-ஆம் தேதி முதல் தொடங்கவிருந்த பருவத் தேர்வுகளையும் ஒத்திவைத்து சென்னைப் பல்கலைக்கழகம் அறிவித்துள்ளது.

கரோனா தொற்று பரவலைக் கருத்தில் கொண்டு மீண்டும் தேர்வை எப்போது நடத்தலாம் என்பது குறித்து ஆலோசித்து முடிவு எடுத்து அறிவிக்கப்படும் என பல்கலைக்கழகம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மதுக் கடைகளை உடனடியாக மூட வேண்டும்

ஓ.பன்னீர்செல்வம், ராமதாஸ்

சென்னை, ஜன.9: கரோனா பரவலைத் தடுக்க மதுக்கடைகளை உடனடியாக மூட வேண்டும் என்று அதிமுக ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம், பாமக நிறுவனர் ராமதாஸ் ஆகியோர் வலியுறுத்தியுள்ளனர்.

ஓ.பன்னீர்செல்வம்: புதிய கட்டுப்பாடுகள் அறிவித்த 3 நாள்களில் கரோனா தொற்று இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது. இதற்கு மதுக்கடைகள் திறந்து வைத்திருப்பது காரணம். பிப்ரவரி மாதத்தில் கரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை உச்சத்தைத் தொடும் என்று வல்லுநர்கள் கருத்து தெரிவிக்கின்றனர். இதனைக் கருத்தில் கொண்டு மதுக்கடைகளை உடனடியாக மூட உத்தரவிடுவதுதான் உத்தமமாக இருக்கும்.

ராமதாஸ்: தமிழகத்தில் கரோனா பரவலைத் தடுக்க அத்தியாவசிய சேவைகளுக்குக் கூட கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. மதுக்கடைகள் அத்தியாவசியம் இல்லை. ஆனால், கட்டுப்பாடுகள் இன்றி அவை செயல்படுகின்றன. அவை உடனடியாக மூடப்பட வேண்டும். நோய்ப்பரவலுக்கு வழிவகுக்கும் பார்களையும் மூடுவதற்கு தமிழக அரசு ஆணையிட வேண்டும்.

தமிழகத்தில் ஒரே நாளில் 12,895 பேருக்கு கரோனா

சிகிச்சையில் உள்ளோர் எண்ணிக்கை 51,335-ஆக உயர்வு

சென்னை, ஜன.9: தமிழகத்தில் ஞாயிற்றுக்கிழமை ஒரே நாளில் 12,895 பேருக்கு கரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இது கடந்த ஆறு மாதங்களில் இல்லாத அதிகபட்ச எண்ணிக்கை என்பது குறிப்பிடத்தக்கது.

இதே நிலை தொடர்ந்தால் அடுத்த சில நாள்களுக்குள் தினசரி கரோனா பாதிப்பு 20 ஆயிரத்தைக் கடந்துவிடும் என அஞ்சப்படுகிறது. சென்னையைப் பொருத்தவரை மொத்த பாதிப்பில் 50 சதவீதம் பதிவாகியுள்ளது. இதன் காரணமாக நகரில் உள்ள முக்கிய மருத்துவமனைகள் அனைத்தும் நிரம்பும் நிலை ஏற்பட்டுள்ளது.

தற்போது மருத்துவமனைகளிலும், வீடுகளிலும் தற்போது மருத்துவக் கண்காணிப்பில் 51,335 பேர் உள்ளதாக சுகாதாரத் துறைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அதிக பாதிப்பு இல்லாதவர்களை வீடுகளிலேயே தனிமைப்படுத்தி சிகிச்சை வழங்க மக்கள் நல்வாழ்வுத் துறை நடவடிக்கை எடுத்துள்ளது. சென்னை மட்டுமல்லாது, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், கோவை உள்பட பல மாவட்டங்களில் கரோனா தொற்று பரவல் மூன்று மடங்கு அதிகரித்துள்ளது.

தற்போது பரவி வருவது ஒமைக்ரான் கரோனா வகை எனக் கருதப்படுவதால் மக்கள் அலட்சியத்துடன் இருந்தால் ஓரிரு வாரங்களிலேயே தமிழகம் முழுவதும் லட்சக்கணக்கானோருக்கு தொற்று பரவும் அபாயம் இருப்பதாக மருத்துவ நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

மற்றொருபுறம் கரோனா தொற்றிலிருந்து மேலும் 1,808 பேர் கரோனாவிலிருந்து விடுபட்டு ஞாயிற்றுக்கிழமை வீடு திரும்பியுள்ளனர். இதன் மூலம் இதுவரை குணமடைந்தோரின் எண்ணிக்கை 27 லட்சத்து 12,096-ஆக அதிகரித்துள்ளது.

தமிழகத்தில் கரோனா பாதிப்புக்குள்ளாகி மேலும் 12 பேர் பலியாகியதை அடுத்து நோய்த் தொற்றால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 36,855-ஆக அதிகரித்துள்ளது.

இதனிடையே, ஒமைக்ரான் அறிகுறிகளுடன் சிகிச்சை பெற்று வந்த 264 பேரில் 95 சதவீதம் பேர் வீடு திரும்பியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒமைக்ரான் தொற்று உறுதி செய்யப்பட்ட 185 பேரில் 179 பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளதாக மக்கள் நல்வாழ்வுத் துறை தகவல் வெளியிட்டுள்ளது.

முன்னாள் துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம், ப.ரவீந்திரநாத் மீது வழக்கு

தேனி, ஜன. 9: தேர்தல் வேட்பு மனு பிரமாணப் பத்திரத்தில் தவறான தகவல் அளித்ததாக புகாரின் அடிப்படையில், முன்னாள் துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் மற்றும் அவரது மகன் தேனி மக்களவை உறுப்பினர் ப.ரவீந்திரநாத் ஆகியோர் மீது தேனி மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவு போலீஸார் ஞாயிற்றுக்கிழமை வழக்குப் பதிந்துள்ளனர்.

கடந்த 2021-ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தலில் போடி தொகுதியில் போட்டியிட்ட முன்னாள் துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம், கடந்த 2019-ஆம் ஆண்டு நடைபெற்ற மக்களவைத் தேர்தலில் தேனி தொகுதியில் போட்டியிட்ட அவரது மகன் ப.ரவீந்திரநாத் ஆகியோர் வேட்பு மனு தாக்கலின் போது தங்களது சொத்துக்கள், வங்கிக் கணக்கு, வருவாய், கல்வித் தகுதி ஆகியவை குறித்து பிரமாணப் பத்திரத்தில் தவறான தகவல் அளித்துள்ளதாகவும், இதன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தேனி மாவட்ட திமுக இளைஞரணி முன்னாள் அமைப்பாளர் மிலானி, எம்எல்ஏ, எம்பி.க்கள் மீதான வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனுவின் மீது வழக்குப் பதிந்து விசாரணை நடத்தி, வரும் பிப்ரவரி 7-ஆம் தேதிக்குள் நீதிமன்றத்திற்கு அறிக்கை அளிக்குமாறு, கடந்த ஜனவரி 7-ஆம் தேதி தேனி மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவு போலீஸாருக்கு நீதிபதி பன்னீர்செல்வம் உத்தரவிட்டார்.

அதன்பேரில், ஓ.பன்னீர்செல்வம், ப.ரவீந்திரநாத் ஆகியோர் மீது மக்கள் பிரதிநிதித்துவ சட்டப் பிரிவுகளின் கீழ் மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவு காவல் ஆய்வாளர்(பொறுப்பு) அரங்கநாயகி வழக்குப் பதிந்துள்ளார்.

சு.திருநாவுக்கரசருக்கு கரோனா

சென்னை, ஜன.9: காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சு.திருநாவுக்கரசர் கரோனா பாதிப்பு காரணமாக தனிமைப்படுத்திக் கொண்டுள்ளார்.

இது தொடர்பாக ஞாயிற்றுக்கிழமை அவர் வெளியிட்ட அறிக்கை: எனக்கு லேசான காய்ச்சல் ஏற்பட்டதால் கரோனா பரிசோதனை மேற்கொண்டதில் கரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. மருத்துவரின் ஆலோசனைப் படி தனிமைப் படுத்திக் கொண்டுள்ளேன்.

கடந்த இரண்டு நாள்களாக என்னை நேரில் சந்தித்தவர்கள் மற்றும் என்னோடு தொடர்பில் இருந்தவர்கள் அனைவரும் பரிசோதனை மேற்கொள்ள வேண்டும் என்று கூறியுள்ளார்.

ரயில் நிலைய மேம்பாட்டு கட்டணம்

பயணிகளிடம் வசூலிக்க ரயில்வே முடிவு

சென்னை, ஜன.9: ரயில் நிலையங்களின் மேம்பாட்டுக் கட்டணத்தை பயணிகளிடம் வசூலிக்க ரயில்வே நிர்வாகம் முடிவு செய்துள்ளது.

மேற்கு மத்திய ரயில்வேயின் ராணி கமலாபதி நிலையம் மற்றும் மேற்கு ரயில்வேயில் குஜராத் காந்திநகர் நிலையம் ஆகியவற்றில் மேம்பாட்டுப் பணிகள் முடிந்து, பயன்பாட்டுக்கு வந்துள்ளன. இவ்வாறு மேம்படுத்தப்படும் அல்லது மறு சீரமைக்கப்படும் ரயில் நிலையங்களை பயன்பாட்டுக்கு வந்ததும், அந்த நிலையங்களில் இருந்து பயணிகள் ஏறவும் இறங்கவும் கட்டணம் வசூலிக்க ரயில்வே நிர்வாகம் முடிவு செய்துள்ளது.

இதுகுறித்து அதிகாரிகள் கூறியது:

ஒவ்வொருபயணியிடமும் 'ஏசி' வகுப்புகளுக்கு ரூ.50, தூங்கும் வசதி கொண்ட பெட்டிக்கு ரூ.25 சாதாரண வகுப்புக்கு ரூ.10 கூடுதலாக வசூலிக்கப்படும். இந்த தொகை டிக்கெட் மற்றும் முன்பதிவு கட்டணத்துடன் சேர்த்து பெறப்படும். இது ஏறும் நிலையம் அல்லது இறங்கும் நிலையம் என ஒரு முறைக்கு மட்டுமான கட்டணம் ஆகும். அதேநேரம் ஏறுவதற்கும் இறங்குவதற்கும் மேம்படுத்தப்பட்ட அல்லது மறுசீரமைக்கப்பட்ட ரயில்நிலையமாக இருந்தால், இந்த கட்டணம் ஒன்றரை மடங்காக இருக்கும். இதே ரயில் நிலையத்தை பயன்படுத்தும் புறநகர் ரயில் பயணிகளிடம் மேம்பாட்டு கட்டணம் வசூலிக்கப்படாது என்றனர்.

Chola Enter a better life

சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்

பெருநிறுவன அலுவலகம்: 1வது தளம், "டேர் ஹவுஸ்", எண்.2, N.S.C. போஸ் சாலை, சென்னை - 600001.

ஏலம் மற்றும் விற்பனைக்கான பொது அறிவிப்பு

M/s. சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட் (ஜாமீன் பெற்று கடனளித்தவர்) - ன் அதிகாரப்பூர்வ அலுவலரால் பிணைக்காப்பு நிதிச்சொத்து மறுசீரமைப்பு, பிணைச்சொத்து பாதுகாப்பு அமலாக்கம் சட்டம் 2002 ன் கீழ் கடன்தாரர்/ களிடமிருந்து நிலுவைகளை வசூலிப்பதற்காக, இதன் கீழ்க்குறிப்பிட்ட ஜாமீன் சொத்துக்கள் சுவாதீனம் எடுக்கப்பட்டதை தொடர்ந்து, இதன் கீழ் விவரிக்கப்பட்டவாறு, இயற்சுவாதீனம் / அடையாள சுவாதீனத்திலுள்ள அசையா சொத்துக்களை "இருக்கின்ற இடத்தில்" "இருக்கின்ற நிலையில்" "இருக்கின்றவற்றுடன்" என்ற அடிப்படையில் வாங்குவதற்கு மூடி, முத்திரையிட்ட உறையில் விலைப்புள்ளிகள் இதன் கீழ்க்கையொப்பமிட்ட நபரால் வரவேற்கப்படுகிறது.

கடன்தாரர்(கள்) / கூட்டுக்-கடன்தாரர்(கள்) / ஜாமீன்தாரர்(கள்) பெயர் / கடன் கணக்கு எண்	கோரிக்கை அறிவிப்பு தேதி & தொகை	கடனீட்டுச் சொத்துக்களின் விவரம்	மொத்தக் கடன் நிலுவைத் தொகை
கடன் கணக்கு எண். X0HLMDA00001744063 1). மணிமுருகன். P, காலஞ்சென்ற சாந்தி M என்பவரின் தெரிந்த சட்டரீதியான வாரிசு குடியிருப்பு முகவரி : எண். 59/28, குப்புமுத்து தெரு, எல்லீஸ் சாலை, அண்ணா சாலை, சென்னை-02. 2). மணிமுருகன். P, குடியிருப்பு முகவரி -:எண். 59/28, குப்புமுத்து தெரு, எல்லீஸ் சாலை, அண்ணா சாலை, சென்னை-02. மேலும்: ஃப்ளாட் எண். S-3, ப்ளாட் எண். D & E, 2வது தளம், R. அவென்யூ, இரண்டாம்கட்டளை, குன்றத்தூர், சென்னை-128. 3). நாகமுத்து J, குடியிருப்பு முகவரி : எண். 82, கங்கை அம்மன் கோவில் தெரு, கோடம்பாக்கம், சென்னை-28.	01.08.2020 & 31.07.2020 ம் தேதியின் படி, ரூ. 53,90,973.00/- (ரூபாய். ஐம்பத்து மூன்று இலட்சத்து தொண்ணூறாயிரத்து தொள்ளாயிரத்து எழுபத்து மூன்று மட்டும்)	காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் தாலுக்கா, இரண்டாம் கட்டளை கிராமம், சர்வே எண். 250/2, பட்டாவின் படி, புதிய சர்வே எண். 250/2B, ல் அமையப்பெற்ற AR அவென்யூ என்ற லே அவுட்டில் உள்ள ப்ளாட் எண். D & E யைக் கொண்ட சாய்நாத் அபார்ட்மெண்ட்ஸ் என அறியப்படும் கட்டிடத்தின் 2 வது தளத்தில் 1180 சதுர அடி (பொது பரப்பு உட்பட) கட்டிட மேற்பரப்பு கொண்ட ஃப்ளாட் எண். S-3 மற்றும் பார்க்கிங்க பகுதியில் உள்ள ஒரு மூடிய கார் நிறுத்துமிடம் மற்றும் 3475 சதுர அடியில் உள்ள 600 சதுர அடி பிரிபடாத பங்கு இடம் ஆகியன. எல்லைகளாவன: 16 அடி சாலைக்கு - வடக்கு, காலி இடத்துக்கு - தெற்கு, சுரேஷ்க்கு சொந்தமான ப்ளாட் எண். 5 பகுதிக்கு - கிழக்கு, காலி இடத்துக்கு - மேற்கு. மேற்சொன்ன சொத்து பம்மல் சார் பதிவு மாவட்டம், தென் சென்னை பதிவு மாவட்ட எல்லைக்குள் அமைந்துள்ளது.	07.01.2022 ம் தேதியின் படி, ரூ. 69,46,624.00/- மற்றும் பணம் செலுத்தும் தேதி வரை மேற்கொண்டு வரும் வருங்கால வட்டி, அபராத வட்டி, செலவுகள் மற்றும் கட்டணங்கள் ஆகியன.
அடிப்படை விலை : ரூ. 23,00,000/- (ரூபாய். இருபத்து மூன்று இலட்சம் மட்டும்)		அடிப்படை விலை : ரூ. 2,30,000/- (ரூபாய். இரண்டு இலட்சத்து முப்பதாயிரம் மட்டும்)	சொத்தின் சுவாதீன நாள்: 15.10.2020

ஏல செயல்முறை தொடர்பான முக்கிய தகவல்

ஏல தேதி	விலைப்புள்ளிகள் சமர்ப்பிக்க கடைசி தேதி	சொத்து ஆய்வு நாள்
25.01.2022	24.01.2022, மாலை 5.00 மணிக்கு முன்பு	21.01.2022 & 22.01.2022 (அலுவல் நேரத்தில்)

* ஏலதாரர் தனது சொந்த விருப்பில் ஏலத்தில் விலைப்புள்ளி / விலைகோரல் ஆவணத்துடன் உள்ள உரிய படிவத்தில் இதன் கீழ்க்குறிப்பிட்ட முகவரியில் விண்ணப்பித்து, இவ்வசதியை பெறுறுக்கொள்ளலாம். விற்பனையானது இவ்விளம்பரத்தில் இணைக்கப்பட்டுள்ள மற்றும் விலைப்புள்ளி / விலைகோரல் ஆவணத்தில் பரிந்துரைக்கப்பட்ட விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கட்டாயம் கட்டுப்பட்டதாகும். இவ்வறிவிப்பை, பிணைக்காப்பு அமலாக்கம் விதிகள் 2002 ன் விதி 8(5)(c) மற்றும் 8(6) ன கீழான 15 நாட்கள் கெடு அறிவிப்பு எனவும் கருதப்பட வேண்டும்.

ஏலத்திற்கான விதிகள் மற்றும் நிபந்தனைகள்

1). சொத்து "இருக்கின்ற இடத்தில்" "இருக்கின்ற நிலையில்" மற்றும் "இருக்கின்றவற்றுடன்" என்ற அடிப்படையில் விற்பனை செய்யப்படுகிறது.
2). ஏலதாரர் பட்டியலிடப்பட்ட தேதி மற்றும் நேரத்தில் இதன் மேற்குறிப்பிட்ட சொத்தின் ஒவ்வொரு விபரத்தையும் ஆய்வு செய்தல் உள்ளிட்ட அனைத்து வகையிலும் முழு சிரத்தையுடன் செயல்பட கடமைப்பட்டவராவார்.
3). M/s. சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட் - க்கு சமர்ப்பிக்குப் விலைப்புள்ளிகள் அனைத்தும் கீழ்க்கண்ட வகைகளில் ஏலதாரரால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவே கருதப்படும். (i). அவர் / அது அனைத்து விதங்களிலும் முழு சிரத்தையுடன் செயல்பட்டுள்ளார் / செயல்பட்டுள்ளது; (ii). சொத்தின் அனைத்து விபரங்கள் / அளவீடுகள் ஆகியவற்றில் திருப்தி அடைந்துள்ளார்; (iii). ஏலத்தை நிர்வகிக்கும் அனைத்து விதிகள் மற்றும் நிபந்தனைகளை ஒப்புக்கொள்கிறார்; மற்றும் (iv). வருங்காலத்தில் நிறுவனத்துக்கு எதிராக முரண்படு கோரிக்கைகளை கோரும் அவரது / அதன் அனைத்து உரிமைகளையும் விடுவித்துள்ளார்.
4). விற்பனையானது அதிகாரப்பூர்வ அலுவலரின் உறுதிப்படுத்தலுக்கு கட்டுப்பட்டதாகும். கடன்தாரர் / ஜாமீன்தாரர் மொத்த நிலுவைத்தொகையையும் விற்பனைக்கு முன்பே செலுத்தினால், விற்பனை நடைபெறாது.
5). ஏலதாரர் அதிகாரப்பூர்வ அலுவலர், M/s. சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்., என்று முகவரியிட்ட உறையிலிட்ட விலைப்புள்ளி படிவத்துடன் "M/s.Cholamandalam Investment and Finance Company Limited" என்ற பெயரில் எடுக்கப்பட்ட பேங்கர்'ஸ் செக் / கேட்பு வரைவோலை மூலம் செலுத்தப்பட்ட டேவணித்தொகையையும் சேர்த்து அந்தந்த கடன் கணக்குக்காக 24.01.2022 அன்று மாலை 05.00 மணி வரை செலுத்த வேண்டும். வெற்றி பெற்ற ஏலதாரர்(களை) பொருத்த வரை டேவணித்தொகையை, M/s. சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட் - ஆல் பெறத்தக்க விற்பனை தொகைக்கு எதிராக கழித்துக்கொள்ளலாம்.
6). வெற்றி பெற்ற ஏலதாரர் விலைத்தொகையில் 25% யை விற்பனையானது அவரது / அதன் பெயரில் முடிவுற்ற உடனேயே செலுத்தப்பட வேண்டும்., மீதி தொகையை 15 நாட்களுக்குள் "M/s. Cholamandalam Investment and Finance Company Limited" என்ற பெயரில் எடுக்கப்பட்ட பேங்கர்'ஸ் செக் / கேட்பு வரைவோலை மூலம் செலுத்தப்பட வேண்டும்.
7). வெற்றி பெற்ற ஏலதாரர் விலைத்தொகையில் 25% தொகையை விற்பனை அவரது / அதன் பெயரில் முடிவுற்ற உடனே செலுத்த தவறினால், மற்றும் / அல்லது மீதி தொகையை 15 நாட்களுக்குள் செலுத்த தவறினால், ஏலதாரரால் செலுத்தப்பட்ட தொகை முழுவதும் எந்த முன்னறிவிப்புமின்றி அபராதமாக கருதி கழித்துக்கொள்ளப்படும்.
8). பரிமாற்றத்துக்கான செலுத்தப்பட வேண்டிய முத்திரை தீர்வை, பதிவு கட்டணம், உள்ளிட்ட கட்டணம் / தொகை, நிர்வாக கட்டணம், மின் கட்டணம் போன்றவற்றை வெற்றி பெற்ற ஏலதார ரே ஏற்றுக்கொள்ள வேண்டும். அதிகாரப்பூர்வ அலுவலர் விற்பனைக்குள்ளான சொத்து மீதான ஏதேனும் கடன் பொறுப்பு, சொத்து வரி அல்லது அரசு அல்லது உள்ளாட்சி அமைப்பு அல்லது இதர அதிகார அமைப்பு களுக்கு செலுத்த வேண்டிய இதர நிலுவைகள் இருப்பின் அவைகளுக்கு பொறுப்பல்ல.
9). அதிகாரப்பூர்வ அலுவலர், எந்த முன்னறிவிப்புமின்றி, எக்காரணமும் கூறாமல், விலைப்புள்ளிகளை ஏற்றுக்கொள்ள / நிராகரிக்க அல்லது விற்பனையை ஒத்தி வைக்க / தள்ளி வைக்க / ரத்து செய்ய, விற்பனைக்கான விதிகள் மற்றும் நிபந்தனைகளை மாற்றியமைக்க உண்டான அதிகாரத்தை தன்னகத்தே கொண்டுள்ளவராவார்.
10). விற்பனையானது வெற்றி பெற்ற ஏலதாரர் பெயரில் மட்டுமே இருக்குமேயன்றி அவரது பதிலி (nominee) பெயரில் இருக்காது.
11). இவ்வறிவிப்பு குறிப்பாக கடன்தாரர்(கள்) ஜாமீன்தாரர்(கள்) மற்றும் பொது மக்களுக்குமான அறிவிப்பாகும். கடன்தாரர் விற்பனை செயல்முறை உறுதிப்படுத்தப்படும் வரை சொத்துக்களை மீட்க முழு உரிமை கொண்டவராவார்.

M/s. சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்., இதன் மேற்குறிப்பிட்ட சொத்து மீதான எந்த கடன் பொறுப்புக்கும் எவ்விதத்திலும் பொறுப்பல்ல. சொத்து "இருக்கின்ற இடத்தில்" "இருக்கின்ற நிலையில்" மற்றும் "இருக்கின்றவற்றுடன்" என்ற அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.

தேதி : 10.02.2022 ஒப்பம்/-, அதிகாரப்பூர்வ அலுவலர்
இடம் : சென்னை சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட் - க்காக

बैंक ऑफ़ बड़ौदा **Bank of Baroda**

பிராந்திய அலுவலகம் (சென்னை கிராமபுற பிராந்தியம்) போன் : 044 - 28885416

கிளையை மாற்றுவதற்கான இடம் தேவை

கீழ்க்கண்ட இடங்களுக்கு நீண்டகால அடிப்படையில் குத்தகை/ வாடகை முறையில் தரை தளத்தில் உடனடியாக மாற்றுவதற்கு இடம் தேவை.

வ.எண்.	இடம்	பரப்பளவு (தோராயமாக)
1.	முடிச்சூர்	1100 - 1500 சதுர அடி

மேலும் விவரங்களுக்கு www.bankofbaroda.com/tender.aspx என்ற இணையதளத்தில் டெண்டர் பிரிவில் பார்க்கவும். டெண்டர்களை சமர்ப்பிக்க வேண்டிய கடைசி தேதி : 31.01.2022 மாலை 3.00 மணி வரை.

இடம் : சென்னை
தேதி : 10.01.2022 மண்டல மேலாளர்

यूनियन बैंक யூனியன் பாங்க் ஆஃப் இந்தியா

அம்பத்தூர் 2 கிளை
(முன்னர் ஆந்திரா வங்கி MSME கிளை)
எண்.10/A, பேர்க் பார்ட் தெரு, வெங்கடாபுரம், அம்பத்தூர், சென்னை-600053. போன் : 044 - 26571383 , மின்னஞ்சல்: bm1830@unionbankofindia.com

அசையா சொத்துக்களின் சுவாதீன அறிவிப்பு விதி 8(1)

பிணைக்காப்பு நிதிச் சொத்து மறு சீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்கச் சட்டம், 2002 (SARFAESI சட்டம்) மற்றும் பிணைக்காப்பு (செயலாக்க) விதிகள் 2002 (விதியின் கீழ் அதிகாரம் பெற்ற அதிகாரியாக நியமிக்கப்பட்டவரான கீழே கையொப்பமிட்ட **யூனியன் பேங்க் ஆஃப் இந்தியா, அம்பத்தூர் 2 கிளை, (முன்னர் ஆந்திரா வங்கி MSME கிளை)**-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் 13(12) பிரிவு மற்றும் விதி 3ன் படி **19.04.2021** தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பில் (Demand Notice) குறிப்பிடப்பட்ட கடன்தாரர் **திரு. J. சுதர்ஸன் த/பெ. திரு. K. ஜெயகோபி** அவர்களுக்கு கடன்பாக்கி தொகையான **ரூ.8.75,096 (ரூபாய் எட்டு இலட்சத்து எழுபத்து ஐந்து ஆயிரத்து தொண்ணூற்று ஆறு மட்டும்)** மேலும் வட்டி மற்றும் இதர கட்டணங்கள் செலுத்துவதற்கு இந்த அறிவிப்பு பெற்ற **60 நாட்களுக்குள்** திரும்ப செலுத்த வேண்டுமென்று அனுப்பப்பட்டது.

கடன்தாரர் கடன்தொகையை திரும்ப செலுத்த தவறியதால், கடன்தாரர் மற்றும் பொது மக்களுக்கு பொதுவாகவும் இதன் மூலம் அறிவிப்பதாவது கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களை SARFAESI சட்டம் 2002 பிரிவு 13(4)ன் விதி 8ன் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படியும் மற்றும் அதற்கு தொடர்புடைய மேற்சொன்ன விதியின் படியும், கீழே கையொப்பமிட்டுள்ள அதிகாரி தமக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களை **04.01.2022** அன்று சுவாதீனம் செய்துள்ளார்.

கடன்தாரருக்கு குறிப்பாகவும் மற்றும் பொது மக்களுக்கு பொதுவாகவும் இதன் மூலம் எச்சரிக்கப்படுவது யாதெனில் மேற்படி சுவாதீனமான சொத்து விஷயத்தில் எவரும் எவ்வித போமும் வைத்துக்கொள்ளக் கூடாது. மீறி வைத்துக்கொண்டால் அது **யூனியன் பேங்க் ஆஃப் இந்தியா, அம்பத்தூர் 2 கிளைக்கு** செலுத்தவேண்டிய கடன்பாக்கி தொகையான **ரூ.8.75,096 (ரூபாய் எட்டு இலட்சத்து எழுபத்து ஐந்து ஆயிரத்து தொண்ணூற்று ஆறு மட்டும்)** மற்றும் வட்டி சேர்த்து செலுத்துவதற்கு கட்டுப்பட்டதாகும்.

கடனுக்கு ஈடாக அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்துக்களை மீட்பதற்குரிய கால வரம்பு குறித்து சட்ட பிரிவு 13(8) ஷரத்துக்களின்படி கடன்தாரர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

பிணைச் சொத்தின் விவரங்கள்

சென்னை, திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் வட்டம், அம்பத்தூர் கிராமத்தின் பழைய சர்வே எண்.213 பகுதி மற்றும் புதிய T.சர்வே எண்.91, பிளாக் எண்.57, வார்டு-B இல் அடங்கிய சென்னை - 600053, அம்பத்தூர், டோபி காலனி, கன்னையா மேஸ்திரி தெரு, கதவு எண்.23/19 இல் அமைந்துள்ள 1130 ச.அடி விஸ்தீரணம் கொண்ட நிலம் அதனுடன் அதில் அமைந்துள்ள 738.50ச.அடி கட்டிடம், மற்றும் அதன் **எல்லைகள்:** வடக்கில்: கால்வாய்; தெற்கில்: கன்னையா மேஸ்திரி தெரு; கிழக்கில்: திரு. விஜயகுமார் அவர்களின் நிலம் மற்றும் கட்டிடம்; மேற்கில்: திரு. இராதாகிருஷ்ணன் அவர்களின் நிலம் மற்றும் கட்டிடம்.

தேதி : 04.01.2022, இடம் : சென்னை அதிகாரபூர்வ அதிகாரி / யூனியன் பேங்க் ஆஃப் இந்தியா

கடன் மீட்பு தீர்ப்பாயம் - II

வேது தளம், கூடுதல் அலுவலக கட்டிடம், சாஸ்திரி பவன், நுங்கம்பாக்கம், சென்னை-600006.

DRC எண்.384/2016 **மின்னணு ஏல விற்பனை** தேதி:07.01.2022

விற்பனை பிரகடனம்

(Under Rule 52 (2) of Second Schedule to the IT Act, 1961 r/w Sec. 25 to 29 of RDDBI & FI Act, 1993)

OA எண்.452/2015-ல், இந்தத் தீர்ப்பாயத்தின் வசூல் அதிகாரி அவர்களால் வழங்கப்பட்ட 18.07.2016 தேதியிட்ட DRC எண்.384/2016-ன் படியும் மற்றும் 02.08.2016-தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பின் படி G.கார்த்திகேயன் மற்றும் ஒருவரிடமிருந்து யூகோ வங்கி, அடையார் கிளை, சென்னைக்குச் சட்டப்படி சேர வேண்டிய தொகையான ரூ.34,12,856.81யை (ரூபாய் முப்பத்தி நான்கு இலட்சத்து பன்னிரெண்டாயிரத்து எண்ணூற்று ஐம்பத்தி ஆறு மற்றும் பைசா எண்பத்தி ஒன்று மட்டும்) மற்றும் வட்டி, இதர செலவுகள், உடன் சேர்த்து, ஏற்கனவே செலுத்திய தொகை ஏதேனும் இருப்பின் அதனை கழித்துக் கொண்டு மீதமுள்ள பாக்கித் தொகையை வசூலிப்பதற்காக கீழ்க்காணும் சொத்து "உள்ள இடத்தில் உள்ளவாறு", "உள்ளது உள்ளவாறு" மற்றும் "புகார்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது" எனும் அடிப்படையில் www.bankeauctions.com எனும் இணையதளம் மூலம் ஆன்லைன் மின்னணு ஏல விற்பனை முறையில் விற்கப்படவுள்ளது. 18.11.2021-அன்றுள்ளபடி ரூ.48,02,777.81 (21.12.2021-தேதியிட்ட வங்கி குறிப்பேட்டின் படி), பாக்கித்தொகை வட்டி மற்றும் செலவுகளை உள்ளடக்கியது.

சொத்து விபரம்

அட்டவணை-A) தென்சென்னை பதிவு மாவட்டம், பூந்தமல்லி சார்-பதிவு மாவட்ட எல்லைக்குட்பட்ட, திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லி தாலுகா, பூந்தமல்லி கிராமம், 31.01.2013 தேதியிட்ட கடித எண்.1266/2013-வாயிலான கட்டிட அப்ருவல், சக்தி நகர், சர்வே எண்.584-ல் மொத்தமுள்ள 0.73 சென்ட் நிலத்தில் மனை எண்.3-ல் உள்ள 2400 சதுர அடி, வீட்டு மனை மற்றும் அதனுடன் இணைந்த பகுதிகளும். எல்லைகள்: வடக்கில்:மனை எண்.4, தெற்கில்:30 அடி ரோடு, கிழக்கில்: மனை எண்.2, மேற்கில்:மனை எண்.6. அளவுகள்:வடக்குப்பக்கம் 40 அடி, தெற்குப்பக்கம் 40 அடி, கிழக்குப் பக்கம் 60 அடி, மேற்குப்பக்கம் 60 அடி, ஆக சுமார் 2400 சதுர அடி. விற்பனைக்குறிய சொத்தான அட்டவணை B & C-ன் விபரம்: அட்டவணை B:அட்டவணை "A"ல் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தில் பாகம் பிரிக்கப்படாத பங்கான 324 சதுர அடி நிலம். அட்டவணை-C) இரண்டாவது தளத்தில் 648 சதுர அடி (சூப்பர் பிளின்த் ஏரியா/பில்டப் ஏரியா/பொதுப்பகுதி) அளவில் கட்டப்பட்டுள்ள ஃபிளாட் எண்.S-1.

குறைந்த பட்ச விலை:ரூ.23,30,000/-
(ரூபாய் இருபத்தி மூன்று இலட்சத்து முப்பதாயிரம் மட்டும்)

ஆன் - லைன் ஏலம் நடைபெறும் நாள் மற்றும் நேரம்	: 17.02.2022 (வியாழக்கிழமை) அன்று காலை 11.00 மணி முதல் மதியம் 12.00 மணி வரை நடத்தப்படும். (ஏலம் முடிவடையும் வரை தலா 3 நிமிடங்கள் கால அவகாசம் தொடர்ந்து தானாகவே நீடிக்கப்படும்)
டேவணித் தொகை	: குறைந்தபட்ச விலையில் 10% ரூ.2,33,000/- (ரூபாய் இரண்டு இலட்சத்து முப்பத்தி மூன்றாயிரம் மட்டும்)
டேவணித்தொகையுடன் கூடிய விலைக்குறிப்பீட்டு படிவத்தினை சமர்ப்பிக்க கடைசி தேதி	: "மீட்பு அதிகாரி, DRT-II, சென்னை", நடப்பு கணக்கு எண். 163302000000100-ல் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி,கதீட்ரல் கிளை, சென்னை - 600 002.கிளை குறியீடு: 0109, (IFSC குறியீடு: IOBA0000109) என்ற கணக்கில் 15.02.2022 (செவ்வாய்கிழமை) க்குள் செலுத்த வேண்டும்.
விலைக் குறிப்பீட்டுத் தொகையை உயர்த்திக் கோரும் அளவு	: ரூ.25,000/- (ரூபாய் இருபத்தி ஐந்தாயிரம்மட்டும்)
சொத்தினை பார்வையிட	: 28.01.2022 (வெள்ளிக்கிழமை) காலை 11.00 மணி முதல் பிற்பகல் 03.00 மணி வரை.

தீர்ப்பாயத்தினால், எந்தவொரு சூழ்நிலையிலும் விலைப்புள்ளிகள் படிவங்களாக ஏற்றுக் கொள்ளப் படமாட்டாது மற்றும் விசாரணைகள் எதுவும் ஊக்குவிக்கப் படமாட்டாது.

மேற்குறிப்பிட்டுள்ள ஏலம் இ-ஏலம் பற்றிய இதர விபரம் மற்றும் விண்ணப்ப படிவம் விரிவான விதிமுறை மற்றும் நிபந்தனைகளை பின்வரும் இணையதளத்தில் காணலாம்.

இணையதளம்: www.bankeauctions.com

சொத்து பற்றிய ஏதேனும் விபரங்கள், தேவைப்படின் **திரு.K.U.ஜெகன்னாதன், முதன்மை மேலாளர், யூகோ வங்கி, அடையார், சென்னை-600020. (தொடர்புக்கு:மொபைல்--99940 91815)** அவர்களை தொடர்பு கொள்ளலாம் மற்றும் மின்னணு ஏலம் முறையின் உதவிக்கு எங்களது சேவை முகவரான M/s.C1 India Pvt. Ltd., Plot No.301, First Floor, Udyog Vihar, Phase-2, Gurgaon Haryana - 122 015, திரு.பிரபாகரன்.M, (07418281709) அவர்களை தொடர்பு கொள்ளலாம்.

(S.சோஃபின் ரோஸ்)
மீட்பு அதிகாரி

SALE NOTICE UNDER IBC, 2016

M/s. SIVA INDUSTRIES AND HOLDINGS LIMITED (In Liquidation)

Reg.off.: Old No.19, New No. 32, Cathedral Garden Road, Nungambakkam, Chennai - 600034
Liquidator office: "Akshayam", 4th Floor, Old No. 4/1, New no. 153-B, Sugavaneswara Street, Salem-636004.

E- Auction under Insolvency and Bankruptcy Code, 2016
Date and Time of Auction : Thursday, 10th February, 2022 from 10.30 AM to 5.00 PM
(With unlimited extension of 5 minutes each)

Sale of assets of **M/s. Siva Industries and Holdings Limited (In Liquidation)** forming part of Liquidation Estate by the Liquidator, appointed by the Hon'ble National Company Law Tribunal, Chennai bench vide order no: IA/837/IB/2020 in IBA/453/2019 dated 12th August, 2021.The sale will be done by the undersigned through the e auction platform **https://ncltauction.auctiontiger.net**

Asset Description	Reserve Price	EMD Amount & Bid Application Submission	Bid Increment Amount
LOT 1: Movable assets comprising of Motor Vehicles situated at Chennai: Cars (6) - Innova, Honda Accord, Honda city ZX GXI CVT AT, Honda CRV, Mercedes Benz S 350, Toyota Camry. **[E-Auction time for Lot 1 - 10:30 AM to 11:30 AM]**	**Rs.19,63,000** (Nineteen Lakhs, Sixty three thousand rupees only)	**Rs.1,96,000** on or before 07th February, 2022 before 5.00 P.M.	**Rs.1,00,000**
LOT 2: Movable assets comprising of Motor Vehicles situated at Chennai: Car (3): Benz (S 500L), BMW, Tata Indica. **[E-Auction time for Lot 2 - 12:00 PM to 01:00 PM]**	**Rs.18,97,000** (Eighteen Lakhs, Ninety seven thousand rupees only)	**Rs.1,89,000** on or before 07th February, 2022 before 5.00 P.M.	**Rs.1,00,000**
LOT 3: Movable assets comprising of Motor Vehicles situated at Mumbai: Cars (3) : Toyota Camry, Mercedes Benz E 280, Honda City ZX GXI MT **[E-Auction time for Lot 3 - 1:30 PM to 02:30 PM]**	**Rs.6,42,000** (Six Lakhs, Forty two thousand rupees only)	**Rs. 64,000** on or before 07th February, 2022 before 5.00 P.M.	**Rs.50,000**
LOT 4: Movable assets comprising of Motor Vehicle situated at Gurgaon: Car - Toyota Camry **[E-Auction time for Lot 4 - 03:00 PM to 04:00 PM]**	**Rs.1,93,000** (One Lakh, Ninety three thousand rupees only)	**Rs.19,000** on or before 07th February, 2022 before 5.00 P.M.	**Rs.20,000**
LOT 5: Movable assets comprising of Motor Vehicles situated at Chennai: Two-wheeler (3) - Bajaj CT 100, Passion Pro, Bajaj Platina. **[E-Auction time for Lot 2 - 4:30 PM to 05:30 PM]**	**Rs.33,000** (Thirty three thousand rupees only)	**Rs.3,000** on or before 07th February, 2022 before 5.00 P.M.	**Rs.1,000**

Date of Inspection : 19th - 21st & 27th - 29th Jan 2022 (from 10.00 AM to 5:00 PM) with prior intimation to the liquidator. The detailed list of Motor Vehicles can be obtained from the office of Liquidator on request or through request e-mail.

BID Application Last Date: 07th February, 2022 (for all five lots)

Terms and Condition of the sale is as under:

1. E-Auction will be conducted on **"AS IS WHERE IS AND WHATEVER THERE IS BASIS"** as such sale is without any kind of warranties and indemnities through approved service provider **M/s E Procurement Technologies Ltd. (https://ncltauction.auctiontiger.net)**
2. The auction comprises of 5 lots, the motor vehicles of CD located at Chennai are auctioned in Lot-1,2,5 and the motor vehicles of CD located at Mumbai are auctioned in Lot-3 and the motor vehicle of CD located at Gurgaon are auctioned in Lot- 4 as per the timings scheduled.
3. Bids shall be submitted to Liquidator (online or hard copy) in the format prescribed. The bid form along with detailed terms & conditions of complete E-Auction process can be downloaded from the website of **https://ncltauction.auctiontiger.net**

Sd/-
CA Ayyampalayam Venkatesan Arun, Liquidator
IBBI/IPA-001/IP-P01079/2017-18/11792
Ph no. 9842712336 / 9842812338
Mail ID: sivaindustriesip@gmail.com

Date : 10-01-2022
Place : Salem